# பெயரற்றவன்

சீட்டுக் குலுக்கிப் போட்டு தேர்ந்தெடுத்து
அப்பா அம்மா சூட்டிய பெயரில் நானில்லை.
குழந்தையாய் இருந்த என்னைக்
கூப்பிடும்போதெல்லாம்
தன் தலை தூக்கிப் பார்த்த
செல்லப் பிராணியின் பெயரில்
எல்லோரும் என்னை அழைக்கிறார்கள்.
சொந்தப் பெயரில் பாதி
புனைபெயருக்கு தானம்.
அலுவலகத்தில் என் பெயர் வெறும் எழுத்து.
என் கனவுகளில் யார் யாரோ
எந்தெந்தப் பெயர்களிலோ என்னை அழைக்கிறார்கள்.
இந்தப் பெயர்களில் எந்தப் பெயர் நான்?
என் மனைவி மட்டுமே இதைக் கொஞ்சம்
புரிந்து கொண்டதாய்த் தெரிகிறது.
"ஏங்க" என்றழைத்து
என் அத்தனைப் பெயரையும் தொலைக்கிறாள்.
என் பெயர்கள் சொல்லும் அர்த்தங்களில் நானில்லை.
நான் நானாக இருக்க முயன்றதில்
கலகக்காரன் எனும் பெயரே மிஞ்சியது.
செத்த பிறகு கிடைக்கும் பிணம் எனும் பெயரும்
எரித்து குளித்தவுடன் நதியில் கரைகிறது.
இப்போது சொல்லுங்கள் நண்பர்களே
நான் யார்? --- 29 ஆகஸ்டு 2020

